**NELIKOLU CHARITABLE TRUST**

Kekkatty, Ellanhalli, Post, The Nilgiris- 643243.
305, Linghi Chetty St., 3rd Floor, Chennai-600001.

நங்0கவ நங்0க அறிவோ

*Let's know ourselves*

---

# நெலிகோலு அறக்கட்டளையின் சமூகப் பணிகள்

நீலகிரி சிறு விவசாயிகள் நலனில் **நெலிகோலு அறக்கட்டளையின்** பங்கு: **பாகம் - 1**

படகர்ச் சமுதாயத்தின் பண்பாடு, மரபு, மொழி, வாழ்வியல் நிலை போன்றவற்றை ஆவணப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் நெலிகோலு அறக்கட்டளை. என்றாலும் படகர் வாழ்வியலோடு ஒட்டிய பிற செய்திகளுக்கும் இவ்வறக்கட்டளைத் தன் பங்களிப்பைச் செலுத்த தவறியதில்லை.

நீலகிரி மாவட்டத்தின், குறிப்பாக நம் சமுதாயத்தின் முதன்மைத் தொழிலாக உள்ளது தேயிலைச் சாகுபடி. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால் நம் சமுதாயம் எதிர்கொண்டுவரும் சிக்கல்களைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. பசுந்தேயிலைக்கு உரிய விலை அறுதியிடுவதற்கு நெலிகோலு அறக்கட்டளை எடுத்துக் கொண்ட முயற்சி குறிப்பிடத் தக்கது.

பசுந்தேயிலைக்கு உரிய விலை வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்திய போராட்டங்கள் தொடர்ந்து சில ஆண்டுகளாக நடந்து வந்ததை நீங்கள் அறிவீர்கள். அக்காலக் கட்டத்தில் கோத்தகிரி வட்டாரத்தைச் சார்ந்த சமூக ஆர்வலர்கள் சிலர் பசுந்தேயிலைக்கு உரிய விலை பெறவேண்டும் என்னும் நோக்கத்தினை முன்னிறுத்தி "நீலகிரி மாவட்ட பசுந்தேயிலை சாகுபடியாளர்கள் பாதுகாப்பு மையம்" என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கினர். இந்த அமைப்பின் சார்பில் நெலிகோலு அறக்கட்டளை யாளராகவும் வழக்கறிஞராகவும் உள்ள திரு. இரா. சிவக்குமார் அவர்களின் ஆலோசனையின் பேரில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கின் எண். W.P.No.39192 of 2002. இந்த வழக்கு ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் தொடர்ந்தது. இறுதியாக 15.06.2007இல் சென்னை உயர்நீதி மன்றம் சிறுதேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்குக் குறைந்த பட்சம் விலை அறுதியிட இயலாது என்னும் நடுவண்

---

அரசின் கூற்றைத் தள்ளி, நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு விலை அறுதியிடுவது அரசின் கடமை என உத்தரவிட்டது. உயந்நீதி மன்றத்தின் அத் தீர்ப்பைச் செயல்படுத்தும் வகையில் பல கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் இன்றியமையாததாக 65:35 என்னும் விழுக்காட்டு முறை முதன்முதலில் நடைமுறைக்கு வந்தது. அதாவது தேயிலை ஏலத்தில் விற்பனை ஆகும் விலையில் 65 விழுக்காடு தேயிலைச் சாகுபடியாளர்க்கும் 35 விழுக்காடு தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்க்கும் எனப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

65:35 என்ற விழுக்காட்டு முறையை அரசு அறிவித்தும் தேயிலை வணிகர்கள், தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் ஆகியோர் இந்த விழுக்காட்டு முறையை முறையாக நடைமுறைப் படுத்தவில்லை. ஆகையால் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்கவில்லை; பசுந்தேயிலை விலையில் ஏற்றத்தாழ்வு தொடர்ந்து இருந்தது.

இந்தக் கட்டத்தில்தான் நெலிகோலு அறக்கடளையின் மேலாண் அறக்கட்டளையாளர் திரு. இர.தருமன் அவர்களின் முயற்சியால் அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவ்வழக்குகள் W.P.No.8780, 10091 of 2008 ஆகியனவாகும். இந்த வழக்குகளில் நெலிகோலு அறக்கட்டளையாளர், வழக்கறிஞர் திரு. இரா.சிவக்குமார் திறம்பட வாதாடி வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஒரு தீர்ப்பினைப் பெற்றுத் தந்தார். சென்னை உயர்நீதி மன்றம் தனது 12.10.2010 நாளிட்ட உத்தரவு தேயிலை வணிகம் முற்றிலுமாக இடைத்தரகர், பெரிய வணிகர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதையும் இதுவே சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்கி யுள்ளது என்பதையும் வெளிக்காட்டி யுள்ளது.


………. ***தொடரும்***